தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 10, சனிக்கிழமை.

சித்திரை 27, அக்ஷய திருவள்ளுவர் ஆண்டு, 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.'

தாமே உணர்கின்ற தன்மை உடையவரின் முன் கற்றவர் பேசுதல், தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிந்தாற் போன்றது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.
மாநில மின் உற்பத்திக் கழகம்.

719 (*வினா எண் 4943)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் மின் உற்பத்தியைத் திறம்பட செய்திட ''மாநில மின் உற்பத்திக் கழகம்'' (Power Generation Corporation, அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மின்சார உற்பத்திக்கென்று ஒரு தனிக் கழகம் ஆரம்பிக்க வேண்டியது மிகச் சிறந்ததோர் சீர்திருத்தம் கர்நாடக மாநிலத்திலே, அதே போல் இங்கிலாந்து நாட்டிலே எல்லாம் இப்படி மின் உற்பத்திக்கென்று தனி கழகம் ஏற்படுத்துகின்ற நிலைமையில், மின் கழகத்திற்கு வந்த நட்டத்தை நிவர்த்தி செய்ய அதிக வாய்ப்பு ஏற்பட்டுஇருக்கிறது. நம் மாநிலத்தில் பார்க்கிறோம், போக்குவரத்துக் கழகங்களை ஆரம்பித்த பிறகுதான் சிறந்த நிர்வாகத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே சிறந்த

போக்குவரத்துக் கழகங்களாக போக்குவரத்தில் இலாபம் ஈட்டுகிற கழகங்களாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ரூ. 200 கோடி நஷ்டம் ஏற்படுகின்ற இந்த மின்துறையில் இப்படிப்பட்ட மின் உற்பத்திக் கழகத்தை உருவாக்குவதில் அமைச்சர் அவர்கள் ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்திக் கழகம் குறிப்பாக, அனல் மின் நிலையங்களைப் பொறுத்த வரையில் அமைத்துச் செயலாற்றுவது நல்லது. அதற்குரிய சூழ்நிலை இன்னும் வரவில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, மின் உற்பத்திக் கழகம் அமைப்பதற்கான சூழ்நிலை வரவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்திலே பெருகிவருகிற மின் தேவையைப் பூர்த்தி செய்ய பல மின் திட்டங்களைப் போட வேண்டும். நிதி ஆதாரங்களைப் பொறுத்த மட்டில், கூடுதலாக நிதி தேவைப்படுகிறது. பல மாநிலங்களில் மின்சாரவாரியங்கள் மூலமாக உலக வங்கியிடம் கடன்வாங்குகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால் இதுவரையில், நம் மின்சாரத் துறை ஒரு பைசா கூட உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில் இலாபம் ஈட்டுகிற வகையில் இருந்தால்தான் அவற்றிற்கு உலக வங்கி கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கும் என்று சொல்கிறார்கள். எனவே இந்த நிலையில் மாநில மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்கிற கருத்தினை அடிப்படையாக வைத்தாவது, இலாப நோக்கில் கொண்டு வருவதற்காகவாவது, உடனே மின் உற்பத்திக் கழகம் அமைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவருடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். வட சென்னை அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை உலக வங்கிக் கடனைக் கோரி உள்ளோம். ஒருவேளை, அவர்கள் அதைத் தனிக் கம்பெனியாக மாற்றவேண்டுமென்று கேட்டாலும் கேட்பார்கள். பொதுவாக அனல் மின் உற்பத்தி நிலையங்களைச் சேர்த்து ஒரு கழகம் அமைப்பதன் மூலம் திறமையான நிர்வாகத்தை, நல்ல பயிற்சி பெற்ற பொறியாளர்களை உருவாக்கி நிர்வகிக்க இயலும். இது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துதான் என்றாலும், நாம் இன்னும் உருவாக்காமல்தான் இருந்து வருகிறோம்.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் பல இடங்களில் பவர்புல் ஜெனரேட்டர்களைப் பொருத்த வேண்டியுள்ளது என்றும் மே மாதத்தில் அவை வந்து விடும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அவை வந்து சேர்ந்து விட்டனவா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவரம் என்னிடத்தில் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது, இது உலகம் ஏற்றுக்கொண்டுள்ள திட்டம் என்றும் அதற்கேற்ற சூழ்நிலை மட்டும் வரவில்லையென்றும் தான் குறிப்பிடுகிறார். உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு திட்டத்தை, நல்ல செயலாக்கம் தரக்கூடிய ஒரு திட்டத்தை உலக வங்கியிலிருந்து கடன் பெற்று பல்வேறு வகையிலே மின் உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு வேறு என்ன என்ன சூழ்நிலையை எதிர்பார்க்கிறார் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் சொல்வார்கள், Right decisions need not be the best decistions) என்று. சரியான கருத்துக்கள் ஏற்கத்தக்க கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, எல்லா நிலைமைகளும் ஒத்து வருகிறபொழுதுதான் அத்தகைய திட்டங்களை உருவாக்க முடியும்.

தனியார் மின் உற்பத்தி நிலையம்.

720—(*வினா எண். 6157)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலை அதிபர்கள் தாங்களே மின் உற்பத்தி நிலையம் அமைத்துக்கொள்ள உரிமை கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) எந்தெந்த நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ. ஆ. மற்றும் இ.) சென்னைநகரிலுள்ள சில தொழிற் நிறுவனங்கள், 110 மெ. வாட் திறன்கொண்ட அனல் மின்நிலையம் அமைக்கும் திட்டம், மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளிலே அடிக்கடி மின்சார வெட்டு வருவதால் எல்லா தொழிற்சாலைகளுக்கும், அவர்களே மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்கும்போது அவர்கள் எல்லோருக்கும் சலுகை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நாம் அனுப்பி கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகின்றன. இந்திய அரசு இதைப்பற்றி